பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

New Master Institute
B.M.C Lane, Jaffna.
★ இன்று ஆரம்பம் ★
PAPER CLASS
ZOOLOGY
12-30 — 1-30 p.m.
திங்கள், வெள்ளி

# உதயன்

விலை
ரூ 2/50

தரமான
A/L விஞ்ஞானக்
கல்விக்கு
என்றும் யாழ்நகரில்
New Master,
Institute
B.M.C. Lane,
Jaffna.

சுடர்: 4 சுக்கில ஒளி 13 புரட்டாதி மீ 04 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 19 (20 : 09 : 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 248

# யுத்தநிறுத்த விதிமுறைகள் பற்றி
# அமைதிப்படை அறிவிப்பு

## ஆயுதங்களை எடுத்துச் செல்ல முன்னறிவிப்புச் செய்ய வேண்டும்

யாழ்ப்பாணம், செப்டம்பர். 20

இந்திய அமைதிப் படையின் இராணுவத் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம் தொடர்பான விதிமுறைகளை இந்திய அமைதிப்படையின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ. எஸ். கல்கத் நேற்று அறிக்கை ஒன்றின் மூலம் வெளியிட்டிருக்கிறார்.

இந்த அறிக்கையில், ஆயுதங்களை எடுத்துச் செல்ல யார், யார் அனுமதிக்கப்படுவார்கள் என்ற விவரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு எடுத்துச் செல்வதற்கும் இந்திய அமைதி காக்கும் படையின் உள்ளூர் அதிகாரிகளிடம் முன்னறிவிப்புச் செய்யவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கையின் முழு விபரம் வருமாறு:-

1: இந்தியா, ஸ்ரீலங்கா அரசுகள் ஒப்புக்கொண்ட நடவடிக்கைகளின்படி நான் எமது படையினரை அவர்களது இராணுவ தாக்குதல் நடவடிக்கைகளை 1989 செப்டெம்பர் 20 ஆம் திகதி காலை 6.00 மணி (ஸ்ரீலங்கா நேரம்) முதல் நிறுத்திவைக்குமாறு ஆணையிடுகிறேன்.

2. எனினும், இந்திய அமைதிகாக்கும் படை—

(அ) சட்டம், அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்;

(ஆ) எந்த ஒரு தனி நபரோ அல்லது கட்சியோ இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டாலோ அல்லது வழமையான பொதுவாழ்வையோ, பல்வேறு இனங்களுக்கிடையே உள்ள அமைதியையோ சீர்குலைக்க முயன்றாலோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்;

(இ) கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்குத் தேவைப்பட்டாலன்றி வேறு எந்தத் தனி நபரோ அல்லது கட்சியோ ஆயுதம், கிரனேட், வெடிமருந்து ஆகியவற்றைத் தாங்கிச் சென்றால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்; இவ்வாறு செல்ல விரும்புவோர், உள்ளூர் இந்திய அமைதிகாக்கும் படை அதிகாரியிடம் முன்னறிவிப்புச் செய்யவேண்டும்.

3. ஸ்ரீலங்காவின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில், அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சி நிறைந்த ஒரு காலத்தைத் தோற்றுவிக்க எல்லா இயக்கங்களும் மேற்குறித்த இராணுவத் தாக்குதல் நிறுத்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள் என நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.



### முச்சந்தி முரளி

சாகிறதுக்கு முன்னும் பல பேருக்கு உப்பிடிப் புகழும், சாதனையளும் வாறது எண்டு சொல்லுறது சரி போல எல்லோ கிடக்கு...!

# நீர்வேலியில் நேற்று மோதல்!

யாழ்ப்பாணம், செப். 20

நீர்வேலிப் பகுதியில் நேற்று இரு ஆயுதக் குழுக்களுக்கு இடையில் மோதல் இடம்பெற்றதாக அறிய வந்தது.

நேற்று மாலை இச்செய்தி எழுதும்போதும் அப்பகுதியில் மோதல் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

இச்சம்பவத்தில் சிலர் உயிரிழந்திருக்கலாம் என்று சொல்லப்பட்டது.

இதேவேளை சிறுப்பிட்டிப் பகுதியில் துப்பாக்கிக் குண்டு பட்டு குடும்பப் பெண் ஒருவர் மரணமானார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி கந்தசாமி (வயது 25) என்பவரே அந்தப் பெண் ஆவார். (ஒ-10)

## ஐ.தே.க. ஆதரவாளர்கள் 17 பேர் நேற்றுக் கொலை!

கொழும்பு, செப். 20

தென்பகுதியில் நேற்று மட்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டனர்.

நேற்று இடம்பெற்ற ஏனைய சம்பவங்கள் வருமாறு:

★ பாதுகாப்புப் படையினர் எட்டு தீவிரவாத சந்தேக நபர்களைச் சுட்டுக் கொன்றனர்.

★ 245 சந்தேக நபர்கள் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டனர்.

★ பல இடங்களில் அடையாளந் தெரியாத 13 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

# மாலைதீவிலிருந்து இந்தியப் படை நவம்பர் மாதத்தில் வெளியேறும்

புதுடில்லி, செப். 20

மாலைதீவில் தற்போதுள்ள 250 இந்திய இராணுவத்தினர் வருகிற நவம்பர் 3 ஆம் திகதி இந்தியா திரும்புவர்.

மாலைதீவு ஜனாதிபதி கயூம் புதுடில்லியில் இதனைத் தெரிவித்தார்.

மாலைதீவில் இந்திய இராணுவத்தினரின் சேவை முடிந்துவிட்டது: இனி அவர்கள் தாயகம் திரும்பலாம். அதற்கான உடன்பாடு ஒன்று இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே ஏற்பட்டுள்ளது—

இப்படி ஜனாதிபதி கயூம் மேலும் தெரிவித்தார்.

மாலைதீவில் சதிப்புரட்சியை முறியடிக்க ஜனாதிபதி கயூமின் அழைப்பின் பேரில் இந்திய இராணுவம் கடந்த ஆண்டு நவம்பர் 3 ஆம் திகதி மாலைதீவு சென்றது தெரிந்ததே. (எ)

### தற்போதைய உடன்பாட்டை

## கருணாநிதி, ஜெயலலிதா வரவேற்பதாக அறிவிப்பு!

கடந்த திங்களன்று கைச்சாத்திடப்பட்ட இந்திய-இலங்கை உடன்பாடு பாராட்டத்தக்க நல்ல ஆரம்பம்.

— இப்படி தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி நேற்றுச் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கை வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று திமுக பொதுக்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் திரு கருணாநிதி சுட்டிக்காட்டினார்.

அதிமுக பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா விடுத்த அறிக்கையில்—

— 'அமைதிக்குழு, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு, இலங்கைத் தமிழருக்கு உறுதியான பாதுகாப்பு, ஆயுதக் களைவு நிறுத்தம் ஆகிய அம்சங்களுடனான இந்த உடன்பாடு நிரந்தரத் தீர்வுக்கான சூழலை உருவாக்கி இருக்கிறது' —என்று தெரிவித்தார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியும் உடன்பாட்டை வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது.

# இளைஞரின் உயிர் காக்க ஜவான்கள் இரத்ததானம்!

சாவகச்சேரி, செப் 20

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமுற்ற இளைஞர் ஒருவரைக் காப்பாற்றுவதற்காக அமைதிப் படையைச் சேர்ந்த ஜவான்களும், பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த ஒருவரும் இரத்ததானம் செய்தனர்!

இந்தச் சம்பவம் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதுபற்றிய விவரம் வருமாறு:-

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வசிரி, இரும்பு மதவடி, படுவாக்கட்டை, கொற்றாவத்தைப் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டுத் தேடுதல் நடத்தப்பட்டது.

அவ்வேளை கொற்றாவத்தையில் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் கரணவாயைச் சேர்ந்த தரை வேலாயுதம் என்ற 26 வயது இளைஞர் படுகாயமுற்றார். துப்பாக்கிச்சூடு நிகழ்ந்த இடத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்ததானம் குறித்து அமைதிப்படை அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 20

உடுப்பிட்டியில் காயமுற்ற ஓர் இளைஞருக்கு அமைதிப்படை ஜவான்கள் இரத்தம் வழங்கியதாக அமைதிப்படையின் யாழ் நகரக் கமாண்டன்ட் லுவலசம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

உடுப்பிட்டியில் அமைதிப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் படுகாயமுற்ற — 26 வயதுடைய — தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளி ஒருவருக்கு, கடந்த 18 ஆம் திகதி மாலை 6 மணிக்கு, மிக அரிதான, மனி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கன்ரன் முறையிலான தன்னாட்சி அவசியம்

### புளொட் ஆலோசனை

கொழும்பு, செப் 20

★ வடக்கு - கிழக்கில் ஆயுதப் பாவனை நிறுவனமயப்படுத்தப்பட்டுவிட்டது: அதனால் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமலேயே உள்ளன;

★ அங்கு அமைதியையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட மக்கள் ஆதரவுள்ளவர்களின் அமைப்பு ஒன்றை உருவாக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனுக்கு மா கப்பல்

யாழ்ப்பாணம், செப். 20

திருகோணமலையில் இருந்து 980 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு காங்கேசன்துறைக்கு கப்பல் ஒன்று வந்து சேர்ந்துள்ளது.

சமீபத்தில் திருகோணமலைக்கு விஜயம் செய்த வர்த்தக, கப்பல்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர். மன்சூர் விடுத்த உத்தரவை அடுத்தே இந்த மா கப்பல் இங்கு அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'மேர்ச் செரண்டிப்' என்னும் இக் கப்பலில் இருந்தே மா இறக்கும் வேலைகள் இன்று புதன்கிழமை ஆரம்பமாக இருக்கின்றன. (ஒ-3)

## சாதனையாளர் புலவர் தீரன் விபத்தில் பலி!

சென்னை, செப். 20

அண்மையில் 432 மணிநேரம் பேசி உலக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்ற மதுரையைச் சேர்ந்த புலவர் தீரன் நேற்று லொறி விபத்து ஒன்றில் உயிரிழந்தார். (உ-எ)

## ஆஸ்பத்திரி தண்ணீரில் அதிகளவு பக்றீரியாக்கள்!

யாழ்ப்பாணம், செப் 20

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பாவிக்கப்படும் தண்ணீரில் அதிக அளவு பக்றீரியாக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது!

அவை நோய்களை வேகமாகப் பரப்பும் என்பதால் தண்ணீர் பெறப்படும் கிணறுகளுக்குத் தினமும் குளோரின் சேர்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இப்போது சம்பந்தப்பட்ட கிணறுகளின் நீருக்கு வாரத்தில் இரண்டு தினங்கள் மட்டுமே குளோரின் கலக்கப்படுகிறது.

இனிமேல் நாளாந்தம் குளோரின் கலக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆஸ்பத்திரி நிர்வாக வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குத் தண்ணீர் பெறப்படும் கிணறுகளின் நீரையும், திருநெல்வேலி குடிதண்ணீர்த் திட்ட கிணறுகளின் நீரையும் யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையினர் ஆய்வுப் பரிசோதனை செய்தனர்.

அப்போது அந்த நீர் வகைகளில் சராசரிக்கு மிகக் கூடுதலான விதசாரத்தில் நுண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி, பளை பகுதி அடகு நகைகள் மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப். 20

சாவகச்சேரி, பளை மக்கள் வங்கிக் கிளைகளில் 1982 டிசம்பருக்கு முன்னர் அடகு வைத்தவர்களின் அடகு நகைகள் இன்றும், நாளையும் மக்கள் வங்கியின் பிரதான வீதிக் கிளையில் மீளளிக்கப்படவுள்ளன.

1989 பெப்ரவரி 24 ஆம் திகதிக்கு முன்னர் அடகு நகைகளை மீளப் பெறுவதற்கு பணம் செலுத்தியவர்களின் நகைகளே இவ்வாறு வழங்கப்படவிருக்கின்றன. (உ-10)

## யாழ். - கொழும்பு தபால் சேவையில் மாற்றம் இல்லை

யாழ்ப்பாணம், செப். 20

யாழ்ப்பாணம் — கொழும்பு தபால் போக்குவரத்து சேவையில் தற்போது மாற்றம் எதுவும் இருக்காது என தபால் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்—கொழும்பு தினசரி ரயில்சேவை சீராக நடைபெற்றால் மாற்று நடவடிக்கை குறித்து தீர்மானிக்கப்படும்.

அதுவரைக்கும் வழமையான முறையில் தபால் பொதிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ் மூலம் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து ரயில் மூலம் எடுத்துச் செல்லப்படும். (ஒ-10)

### மாகாண சபைகள்:

# முதலில் கூடுதல் அதிகாரம்; பின்னர் புதிதாகத் தேர்தல்

## ரெலோவின் யோசனை இது

கொழும்பு, செப் 20

மாகாணசபைகளுக்கு முதலில் கூடுதலதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். பின்னர் மாகாணசபையில் அங்கத்துவ அரசியல் கட்சிகளும் இடம்பெறும் வகையில் சகல மாகாண சபைகளையும் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டும்.

இதனை நாம் ஜனாதிபதியிடம் வலியுறுத்திக் கூறவிருக்கிறோம்.

—ரெலோ இயக்கம் கடந்த ஞாயிறு கொழும்பு சிராவஸ்தியில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

ரெலோ அரசியல் ஆலோசகர் திரு. என். ஸ்ரீகாந்தா, மட்டக்களப்பு எம் பி திரு. கோ. கருணாகரன், அரசியல் பிரமுகர் திரு சிவாஜிலிங்கம் ஆகியோர் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டனர்.

திரு ஸ்ரீகாந்தா அச்சமயம் சொன்னதாவது:-

மாகாணசபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்காதபடியால் சிறப்பாகச் செயற்பட

(6ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

20 - 09 - 1989
புரட்டாதி 4 - புதன்கிழமை
நக்ஷத்திரம்: கார்த்திகை
சுபநேரம்:
04.32 முதல் 06.02 வரை
ராகுகாலம்:
12.02 முதல் 01.32 வரை
கார்த்திகை விரதம்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மிகச் சிறந்த நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் C.D50, விற்பனைக்கு உண்டு; நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்: உதயன் யுனிக், 958/8, K. K. S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (2389)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books) அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் Latest Computer-Books) கதைப்புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்துமடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (மண்டேலா ரேடர் புத்தகசாலை) இல. 02 டல் நிலையம், யாழ்ப்பாணம். [1551]

### தேவை

அலுவலகப் பெண் உதவியாளர் தேவை; விண்ணப்பதாரர் O/L படித்தவராகவும் அலுவலகத்தை திறமையாக நிர்வாகிக்கக் வல்லவராகவும் இருத்தல் வேண்டும். முடிவுத் திகதி: 25. 09. 89. தொடர்பு ஆ. சி.த. தமிழழகன், மானிப்பாய் வீதி, ஆரானைமடம், ஆனைக்கோட்டை. (8207)

### இறைச்சிக் கோழி

புரொயிலர் இறைச்சிக் கோழி சேவல் முட்டை இட்டு இழைந்த கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு மொத்தமாக எடுப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு; சற்குணராஜா & பிறதன் பிரம்படி லேன், கொக்குவில். [2382]

### சேவை

கட்டிட வரைபடங்கள் மதிப்பீடு கட்டிட மேற்பார்வைகளுக்குத் தொடர்பு: 305, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (2149)

### ஆங்கில புத்தகம்

அடிப்படையில் இருந்து ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க பரீட்சைக்குத் தோற்ற வீட்டில் இருந்தபடியே மிகச்சுலபமாக கற்கக்கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகம்தான் Basic Grammar and Spoken Practical வாங்கியோர் பலராலும் பாராட்டப்பெற்றது; கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (1958)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் டைப் பிரதி செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Bnterprises 89/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (இ 8601)

### காணவில்லை

விஜயரத்தினம் (விஜயன்) (வயது 11) என்ற சிறுவனை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவில் தேரின்று தொடக்கம் காணவில்லை; பொதுநிறம் வயதிற்கு குறைவான தோற்றம், காண்பவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். வசிவாச் வேக்டு யாழ்ப்பாணம் அல்லது துர்க்கை அம்மன் கோவில், தெல்லிப்பளை. [2391]

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சு சேவற் குஞ்சுகள் 20ஆம் திகதி புதன்கிழமையும் புரொய்லர் குஞ்சுகள் 21ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதாஸ் பிரம்படிலேன், கொக்குவில். (2383)

### கோழிக்குஞ்சு விற்பனைக்கு

ஒருநாள் பிறவுன் வெள்ளை கறுப்புப் பேட்டுக்குஞ்சுகள், சேவல்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொருகிழமையும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும்; R. S. K. Farm "முருகபதி" மானிப்பாய் பாடசாலை அருகாமையில்: உடுவில் அல்லது R. S. K. Farm தபாலகத்தோர் வீதி, மானிப்பாய். (2394)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒருநாள்கோல்டன் கொமட் பிறவுண்பேட்டுக்குஞ்சு, சேவல் குஞ்சு, புரொயிலர் குஞ்சுகள் 03-10-89, 4-10-89 இலும் கறுப்பு, வெள்ளை, பிறவுண் புரொயிலர்குஞ்சுகள் 29-09-89 06-10-89, 13-10-89 இலும் விற்கப்படும்; R. S. K. Farm "முருகபதி" மானிப்பாய் பாடசாலை அருகில் உடுவில் அல்லது R. S. K. Farm, விதானை வளவு; தபால்கந்தோர்வீதி, மானிப்பாய். (2395)

## பல் நோயாளர் கஷ்டம்

மாங்குளம், செப். 20

முல்லைத்தீவு வைத்தியசாலையில் கடந்த சில மாதங்களாக பல் வைத்தியர் இல்லை இதனால் பல்நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்கு பெரும் கஷ்டப்படுகின்றார்கள், (இ-94)

# பாடசாலை மாறுவது இனி தேவைப்படாது

## கல்வி அதிகாரி உரை

வாரிகாவத்துறை: செப் 20

ஒரு பாடசாலையிலிருந்து இன்னொரு பாடசாலைக்கு மாறிச் செல்வதற்குதற்போது அவசியமில்லை; ஏனெனில் எல்லாப் பாடசாலைகளிலும், தரமான தகுதியான ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்; அத்துடன் தளபாட வசதிகளை மேலதிகமாகச்செய்யவும் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது;

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய வேலணை கோட்டக் கல்வி அதிகாரி திரு, தி. புவேந்திரன் இவ்வாறு தெரிவித்தார். பாடசாலை ஆசிரியர்கள் அதிபர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்;

பெற்றோர் தொழில் ரீதியாக இடம்மாறிச் செல்வது போன்ற பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக்கூடிய காரணங்களைக்காட்டும்மாணவர்களின் பாடசாலை மாறல் ஏற்றுக் கொள்ளப்படலாம்; பாடசாலை அதிபர்கள் இது பற்றி முடிவெடுக்க இயலாதாளுல் கோட்டக்கல்வி அதிகாரியின் அனுமதி பெறலாம் என்ருர்; (இ-16)

## பஸ் சேவை

தாளையடி, செப், 20

யாழ் - ஆழியவளை பாதையில் நண்பகல் பஸ் சேவை ஒன்றை நடத்தும்படி, உடுத்துறை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம், ஆழியவளை கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியன யாழ், சாலை அத்தியட்சகரை கேட்டுள்ளனர். [இ-114]

# றேட்டரி கிராமிய குழுக்கள் சேவை உணர்வை வளர்க்கின்றன

## செயலாளர் உரை

யாழ்ப்பாணம், செப்; 20

சமூக வாழ்வின் தரத்தை உயர்த்தி சமூகத்தில் வாழும் மக்களிடையே சேவை மனப்பான்மையை வளர்க்குவித்து அவர்களை மகிழ்வடையச் செய்யும் நோக்கத்துடன் றேட்டறிக் கிராமியக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

''கிராமிய எழுச்சியில் றேட்டரிக் சமூகத்தின் பங்கு'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்: றேட்டரிக்கழகச் செயலாளர் திரு; சிர் உருத்திரலிங்கம் மேற்கண்டவாறு கூறினுர்;

புங்குடுதீவிலுள்ள மாநில சர்வோதய நிலைய மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது

சர்வோதய அமைப்பாளர் திரு; திருநாவுக்கரசு கருத்தரங்குக்கான ஏற்பாடுகளைச் செய்தார்,

றேட்டரிக் சழகத்தலைவர் திரு: ப. செல்வநாதனும் திரு: திருநாவுக்கரசுவும் கருத்தரங்கில் உரையாற்றினுர்கள்; (க)

## 4 ஆம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### சந்ததியார் (வசந்தன்)

தோற்றம்: 30. 08. 1951

மறைவு: 1985. 09. 20

பாருக்குள்ளே பெரிய கண்டம் - ஆசியாவாம்
ஆசியாவிற்குள்ளே அழகான தீவு - இலங்கையதாம்
இலங்கைதனில் பிரச்சனை நிறைந்த மாகாணம்
- வடக்கதாம்
வடக்கினிலே செழுமை உள்ள மாவட்டம்
- யாழ்ப்பாணமாம்
யாழ்ப்பாணத்தில் ஒரு தொகுதி
- வட்டுக்கோட்டையாம்
வட்டுக்கோட்டையிலே ஒரு கிராமம் - சுழிபுரமாம்
சுழிபுரத்தில் வசிக்கும் மக்கள் - பல ஆயிரமாம்
அவர்களுக்குள்ளே சந்ததியார் என்பவரும் - ஒருவராம்
அவர் எய்க்கு ் எம் நாட்டிற்கும் பாடுபட்டாராம்
அவர் அழிக்கப்பட்டு 4 ஆண்டுகள் சென்றதுவே
அவர் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
- நாம்;

— உறவினர்கள்

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்;

(2342)

## 90 ஆம் நாள் நினைவு அஞ்சலி



### துரைசிங்கம் - மோகனராஜன்

(மோகன்)

அன்னை மடியில்: 28-04-1969

ஆண்டவன் அடியில்: 20-06-1989

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட எம் அன்புச் செல்வமே!
உன் மரணம் விதி அல்ல;
உன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கும்:

உனது அப்பா, அம்மா,
சகோதரர்கள், அத்தான்,
மருமக்கள், உறவினர்,
நண்பர்கள்;

வவுனியா,
பம்பைமடு;

(2210)

## 6th Death Anniversary

IN LOVING MEMORY OF

### Wilfred Dharmaranjan Lawrence

"Years may pass and fade Away
But thoughts of you will always
Stay"
Fondly remembered and sadly missed
by your ever sorrowing
wife VIMALA, son DINESH, Daughter ROSHI; and
FAMILY MEMBERS;

106, 2nd Cross Street, Jaffna; (2209)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 10 - 03 - 1925

மறைவு: 21 - 08 - 1989



### திருமதி இராசம்மா முருகேசு

அன்புக்கோர் இலக்கணமாய் - பண்புக்கோர் உறைவிடமாய்
நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் இல்லறவாழ்வில் பண்புடைச்செல்வியாய்
சீரோடும் சிறப்போடும் பெருக வாழ்ந்து
21 - 08 - 1989 இல் இறையடி இணைந்த
எங்கள் குடும்ப விளக்கு — அன்புத் தெய்வம்

"திருமதி இராசம்மா முருகேசு" வின்

அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளும் மதிய போசனமும் இன்று 20 - 09 - 1989 புதன்கிழமை அவரது காரைநகர் இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்ருர், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாபேரும் இவ் வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உள நிறைவோடு வேண்டுகின்றேம்.

இங்ஙனம்

எஸ். வி. முருகேசு (கணவர்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

விளானை, களபூமி,
காரைநகர்.

[2398]

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



கரைநகர் தங்கோடையைச் சேர்ந்த
அமரர்

### டாக்டர் அம்பலவாணர் கந்தையா

தோற்றம்: 16 - 07 - 1907

மறைவு: 13 - 10 - 1987

திதி: 20. 09. 1989

ஈர் ஆண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் திருமுகம் காணுமல் ஏங்குகின்றேம்! வாடுகின்றேம்! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றேம்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்;

இல: 6, வைரவர் கோவில் வீதி,
[illegible]

(2305)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

### வேலுப்பிள்ளை மகேஸ்வரன்

அன்னை மடியில்: 30-4-1972

ஆண்டவன் அடியில்: 7-8-1989

பெற்றவற்கு உதவுமொரு பிள்ளை
மிகநல்லவன் நீயன்றே
கற்றவனே பொதுச்செயலில்
கலந்து கொண்ட மகேஸ்வரனே
நற்றமிழர் வாழ்வதற்காய்
நல்லுணர்வால் உந்தி நின்ருய் நல்லவனே
பெற்றவர்க்கு நின்பிரிவு
பெரிதுமே துயர்கடலில் வைத்ததம்மா!
உமது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேம்;

உன் பிரிவால் துயருறும்;
தாய், தந்தை,
சகோதர சகோதரிகள்.

பண்டாரி அம்மன்கோவில் ஒழுங்கை,
தம்பசெட்டி,
பருத்தித்துறை;

(C8692)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

குறள்:

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

பொருள்:

வறுமை என்று சொல்லப்படும் துன்ப நிலையினுள் பல வகையாக வேறுபட்டுள்ள எல்லாத் துன்பங்களும் சென்று விளைந்திடும்.


# உதயன்

இல: 303/8, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24606, 22078
20 09 1989


## தமிழ்ப் பகுதிகளில் அமைதிக்கு....

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அமைதியையும், இயல்பு நிலையையும், சமாதானத்தையும், பாதுகாப்பையும், சிவில் நிர்வாகத்தையும் வலுப்படுத்தி, உறுதிப்படுத்தி நிலைநிறுத்துவதற்கென இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே ஓர் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

1987 ஜூலையில் கைச்சாத்தான இலங்கை-இந்திய (ஜே. ஆர்.—ராஜீவ்) ஒப்பந்தம், நடைமுறையில் உரிய விதத்தில் செயற்படுத்தப் படாமையால், செயற்படுத்த முடியாமற் போனதால் இந்தப் புதிய உடன்பாடு தேவையாகியது எனலாம். ஜே. ஆர்.—ராஜீவ் ஒப்பந்தத்தை எழுத்துக்கு எழுத்து நடைமுறைப் படுத்த முடியாமல் தோல்வி ஏற்பட்டது என்பதே கசப்பான உண்மை.

அந்தத் தோல்விக்கான காரண காரியங்கள், மூல கர்த்தாக்கள், பின்னணிகள், நடந்த குளறுபடிகள் என்பனவற்றை இங்கே ஆராய்வது நோக்கமன்று. அநேகமாக எல்லோருக்குமே தெரிந்த அவற்றை, விளக்கப் புகின் இது விரியும்.

பெரிய ஒப்பந்தத்தின் நடைமுறைத் தோல்வியை ஈடு செய்வதற்காகவே புதிய அதிகாரிகள் மட்ட உடன்பாடு என்று சொல்லலாம்.

அமைதிப்படை விலகலை முழு முதல் அம்சமாகக் கொண்டு, பெரிய ஒப்பந்தத்தின் தோல்விக்கான நடைமுறைத் தடங்கல்களை நீக்குவதை இரண்டாவது அம்சமாகக் கொண்டு, புதிய உடன்படிக்கை எழுந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. அவற்றின் விளைவுகளாக அமைதி, சமாதானம், பாதுகாப்பு, அதிகாரப் பரவல், சிவில் நிர்வாகம் ஆகியவற்றை உருவாக்குதலும், நிலை நாட்டுதலும் என்பன அமைவதைக் காணமுடிகிறது. அவற்றின் பொருட்டே சமாதானக்குழு, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு, யுத்த நிறுத்த அவதானிப்புக்குழு என்பன அவசியமாகி உள்ளன.

உடன்படிக்கையின் பிரகாரம் இன்று முதல் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இந்தியப் படை தனது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளும். அதற்கான கால எல்லை, நிபந்தனைகள் குறித்து தெளிவான அறிவிப்புகள் இப்பத்தி எழுதப்படும் வரை இல்லை. இந்த யுத்த நிறுத்தம் நடைமுறை வெற்றியாக அமைய, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்குமா என்பது குறித்தும் உத்தியோக பூர்வ அறிவிப்பு வந்திருக்கவில்லை.

அமைதிப் படையை விலக்கிக் கொள்ள உறுதியளிக்கப்பட்ட எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர், வடக்கு - கிழக்கின் பாதுகாப்பை ஏற்றுக் கொள்ளும் பொறுப்பு மாகாணப் பொலிஸ் படைகள் உட்பட இலங்கை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று உடன்படிக்கை கூறுகிறது. உடன்படிக்கையில் சொல்லப்பட்டுள்ளவற்றை இன்னும் இரண்டரை மாதங்களில் செய்து முடிக்க வேண்டிய தேவையை அது உருவாக்கி உள்ளது.

சமாதானக்குழு, பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு என்பனவும் நியமிக்கப்பட்டு சரிவரவும், சீராகவும் அவை நிறுவப்படும் நோக்கங்களை அடைவதற்காக உரியமுறையில் — கருத்துச் சிக்கல்கள், முரண்பாடுகள், இடையூறுகள், குழப்பநிலை என்பவற்றுக்கு இடம் கொடாமல் — துரிதமாக இயங்க வேண்டும்.

எதையும் சொல்வதும், எழுத்தில் போடுவதும் சுலபம். அதனை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் உண்டாவது இயல்பு. பெரிய ஒப்பந்தத்துக்கும் அதுவே ஏற்பட்டது.

அந்தக் கதி இந்த உடன்படிக்கைக்கும் ஏற்படாமல் தவிர்க்கப்பட வேண்டுமானால், இதில் சம்பந்தப்பட்ட சகல தரப்பாரின் ஒத்துழைப்பும் ஆதரவும் தேவை. அவர்கள் நல்லெண்ணத்துடனும், புரிந்துணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக அனுபவித்த இன்னல்கள் இடர்களை மனதில் வைத்து, அவர்கள் இனியாவது அமைதிச் சூழலில் வாழ வேண்டும் என்பதை முன்னிறுத்தி, அவர்கள் நலன்களையே முதன்மைப் படுத்தி இந்த உடன்பாட்டை செயற்படுத்த உதவ வேண்டும். அதற்கு எல்லாத் தரப்பினரின் நல்லெண்ணமும், ஆதரவும் அவசியம்.

அழிவை நிறுத்தி, அமைதியை உருவாக்கி, அதன் அத்திவாரத்தில் அபிலாஷைகளை அடைய, தீர்க்க தரிசனத்துடன் உழைப்போமாக.

## திக்கம் வடிசாலை புனரமைக்கப்படுகிறது

பனை அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் உதவியுடன் திக்கம் வடிசாலை புனரமைக்கப்படுகின்றது.

பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திக்கம் வடிசாலை 1987 இல் லிபரேசன் ஒப்பரேசன் நடவடிக்கைகளின் போது நாசமாக்கப்பட்டது.

மணித்தியாலம் ஆறாயிரம் போத்தல் சாராயம் உற்பத்தி செய்யக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்த இந்த வடிசாலையின் அழிவு சீவற் தொழிலை நம்பி வாழ்ந்த அப்பகுதி மக்களுக்கும் அங்கு வேலை செய்த பெரும் எண்ணிக்கையான தொழிலாளர் குடும்பங்களுக்கும் பெரும் இழப்பாக அமைந்தது.

தென்னை பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத் தலைவர் திக்கம் வடிசாலையை புனரமைக்க விடுத்த வேண்டுகோளை அடுத்து பனை அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. க. நடராசா எடுத்த முயற்சியால் திக்கம் வடிசாலை மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்படுகின்றது. (க- 120)

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சங்க நிலுவை:

# ஒரு பகுதியையாவது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்: 20

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிலுவையாக உள்ள 4 கோடி 50 லட்சம் ரூபாவில் ஒருபகுதியையாவது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. உணவு முத்திரைக்கான பொருள்களை வழங்குவதில் தடங்கல் ஏற்படுவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த நிலுவையில் ஒரு பகுதியை மத்திய வங்கியிடமிருந்து திறைசேரி கடனாகப் பெற்று வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அறியவருகிறது.

இதேவேளை உணவு முத்திரைக்கான கொடுப்பனவுகளில் 75 சத விகிதத்தை முற்பணமாக வழங்கும்படி யாழ் சமூக சேவைத் திணைக்களத்துக்குச் சுற்று நிருபம் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி கூட்டுறவுச் சங்க அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் 'இந்த சுற்றுநிருபம் எமது நிதிநெருக்கடியை எந்த விதத்திலும் நிவர்த்தி செய்யாது. ஏற்கெனவே நிலுவை இருக்கும்போது முற்பணம் வழங்குவது எப்படிச் சாத்தியமாகும்' என்றார். (தி-9)

## யாழ். பாடசாலைகளை திருத்த 60 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப் 20

யாழ் மாவட்டப் பாடசாலைகள் சிலவற்றை திருத்துவதற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து 60 லட்ச ரூபாவை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்ட எம். பிக்களிற்கு வழங்கப்பட்டுள்ளதனா 25 லட்சம் ரூபாவிலிருந்தே இந்தப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ் செயலகத்தில் நடந்த கூட்டமொன்றில் யாழ் கிளிநொச்சி மாவட்ட எம் பிக்கள் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் பாடசாலைகளை புனரமைக்க தேவையான நிதி அறிக்கை ஒன்று கோரப்பட்டது. அதன்படி யாழ் மாவட்ட பாடசாலைகளை திருத்த யாழ் கல்வி அலுவலகம் 1 கோடியே 80 லட்ச ரூபாவுக்கான நிதி அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது.

இதனைப் பரிசீலனை செய்த எம். பிக்கள் குழு ஆண்டு நிதியிலிருந்து 60 லட்சம் ரூபாவை வழங்குவது என்று முடிவு செய்தது. (அ-9)

## வவுனியாவில் பாண் ரூ. 4.80 வரை விற்பனை!

வவுனியா, செப் 20

கடந்த சனிக்கிழமை தொடக்கம் வவுனியா மாவட்டத்தின் சில கிராமப்புறங்களில் உள்ள கடைகளில் பாண் ஒரு றாத்தல் 4 ரூபா 80 சதம் வரை வெவ்வேறு விலைகளில் விற்கப்படுவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியா நகரில் இருந்து ஒன்றரை இரண்டு மைல் தூரமுள்ள கோவில்குளம் போன்ற பகுதிகளிலேயே இவ்வாறு பாண் விற்பனை செய்யப்படுகிறது.

இதனிடையில் மாவின் விலையை சில கடைகள் கிலோ ஒன்றுக்கு 11 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்படுகின்றது. (இ-164)

## அநாதைச் சிறுவர் இல்ல ஸ்தாபகர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம் செப்: 20

எலிம் அநாதைச் சிறுவர் இல்லத்தின் ஸ்தாபகரான கனடாவைச் சேர்ந்த சகோதரி ஹன்னா தற்பொழுது மூன்று ஆண்டுகளுக்குப்பின் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார்.

இம் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் தமது 80 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடிய சகோதரி ஹன்னா மாத இறுதிவரை இங்கே தங்கியிருப்பார் என அறியப்படுகிறது.

சகோதரி ஹன்னா யாழ்ப்பாணம் பிரவுண் வீதியில் ஒரு குழந்தையுடன் ஆரம்பித்த அநாதைச் சிறுவர் இல்லம் தற்போது மானிப்பாயில் 110 அநாதைச் சிறுவர்கள் உடையதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

## வீடுகளை திருத்தியோருக்கும் ரூ. 15 ஆயிரம் நிவாரணம்

### புதுக்குடியிருப்பில் கோரிக்கை

புதுக்குடியிருப்பு செப். 20

பாதிக்கப்பட்ட வீடுகளில் திருத்த வேலை மேற்கொண்டவர்களுக்கும் ரூபா 15,000/- நிவாரணப் பணத்தை வழங்க வேண்டும் என்று புதுக்குடியிருப்பு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு அறை, சமையல் அறை, விறாந்தை என்ற அடிப்படையில் புதிய வீடு ஒன்றைக் கட்டுவதற்கு ரூபா 15,000/- நிவாரணம் வழங்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் தெரிவித்ததை அடுத்தே இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

முகாமையாளரின் நிபந்தனை ஏற்கனவே பல கஷ்டங்கள் மத்தியில் வீடு திருத்தியவர்களுக்குப் பாதகமாக அமைகின்றது என்று மக்கள் கவலையுடன் தெரிவித்தார்கள். (க-126)

## சனசமூக நிலையங்களிடம் விவரம் கோரப்படுகின்றது

பருத்தித்துறை செப்: 20

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள சகல சன சமூக நிலையங்களும் உடனடியாக சனசமூகநிலையத்தின் பெயர், பதிவு இலக்கமும் திகதி வங்கியின் பெயர்' கணக்கு இலக்கம் நன்கொடை பெற்ற விபரம் முதலியவற்றை செயலாளர் பருத்தித்துறை சனசமூக நிலைய சமாசம், பருத்தித்துறை என்றமுகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இந்த விபரங்களை உடனடியாக வடக்கு கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பி வைத்தால் தான் அடுத்த வருடத்துக்கான நன்கொடை கிடைக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ - 118)

## மொழி பெயர்ப்பு வேலை

அரச அலுவலகங்களில் மொழிபெயர்பாளர் இல்லாத இடத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்குரிய தகுதியுடைய பிற சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களையும் மொழி பெயர்ப்பு வேலைகளில் ஈடுபடுத்துவது தொடர்பான அனுமதி சகல அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு வழங்கப்பட உள்ளன. இது தொடர்பான அறிவித்தல் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. (க-7)

## வடமராட்சி கிழக்கில் கொள்ளைச் சம்பவங்கள்

வடமராட்சி கிழக்கில் இரவுக்கொள்ளைகளினால் மக்கள் பெரும் பீதியுடன் வாழ்கின்றனர்.

அண்மையில் தாளையடி உள்ள ஜெராலற்வேசுதாசன் என்பவர் வீட்டில் இரவு நேரத்தில் உட்புகுந்தகோஷ்டி ஒன்று, வீட்டில் உள்ளவர்களை அறை ஒன்றினுள் பூட்டி விட்டு சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகள்பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்துச்சென்றனர்.

செம்பியன்பற்று வடக்கில் உள்ள இரண்டு வீடுகளில் கொள்ளை முயற்சி முறியடிக்கப்பட்டது.

வீட்டில் இருந்தவர்கள் சத்தமிட்ட போது கொள்ளையர்கள் தப்பிச் சென்று விட்டனர். (இ - 94)

# மதிய உணவு மாதிரிப் பாடசாலைகள்

பருத்தித்துறை செப் 20

யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டக்கல்வி அலுவலகப் பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு மதிய உணவு மாதிரிப் பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சிக் கோட்டக் கல்வி அலுவலகப் பிரிவுக்கான மாதிரி மதிய உணவுத்திட்டப்பாடசாலையாக பருத்தித்துறை கிழக்கு கஷ்டப் பிரதேச பாடசாலையான அம்பன் அ. மி. த. க. பாடசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ... அரசின் மதிய உணவுத் திட்ட ... கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் இப்பாடசாலைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்டார்.

மதிய உணவு மாதிரிப்பாடசாலை ஒவ்வொன்றிலும் ரூபா 20ஆயிரம் செலவில் ஒரு சமையல் அறைகட்டப்படவுள்ளது தெனவும் மற்றும் சமையல் பாத்திரங்கள் கொள்வனவு செய்ய ரூபா 8ஆயிரம் வழங்கப்படுமெனவும் சமையல்செய்வதற்கு இருவரை அமர்த்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு நாடுபூராவும் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் இம்மாதம் 28ஆம் திகதி கொழும்பு கல்வி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறும். (இ-118)

## இலங்கை வங்கி

இலங்கை வங்கியின் சிறுவர் சேமிப்புத் திட்டத்தில் கணக்கை ஆரம்பிக்கும் பெற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை இலங்கை வங்கிக்கிளையில் மாத்திரம் கடந்த இரண்டு மாதங்களில் ... வர்களின் பெயரில் கணக்கு ...

## திருமுகம்

### இனக்கலவரத்தால் வேலை இழந்த அரச ஊழியர்கள்

ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் வெளிவந்த அரசாங்க 26. 4. 88 திகதிய சுற்று நிருபம் 82/88 இன் படி 1983 யூலைக் குழப்ப பயத்தின் காரணமாக இடம்பெயர்ந்தவேலை இழந்த அரச, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் அவர்களுடைய வேலையைத் திருப்பிக் கொடுக்கும்படி தலைவர்கள், காரியதரிசிகள் ஆகியோருக்கு பணிப்புரை வழங்கப்பட்டது.

இதன்படி வேலை இழந்த ஊழியர்கள் 500 க்கும் அதிகமானோர் விண்ணப்பம் செய்தனர். ஆனல் இதுவரையில் 50 பேர்களுக்காவது மீண்டும் வேலை கொடுபடவில்லை.

சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையெடுப்பார்களா?

க. தியாகலிங்கம்,
பருத்தித்துறை.

### உ. அ. அதிபர் நடவடிக்கை எடுப்பாரா?

புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரணத் திட்டத்திற்கான குடும்ப பதிவு அட்டை விஷயமாக சில கஷ்டங்களை J/51 வின் வட கிழக்கு கிராம சேவையாளர் பகுதி மக்கள் அனுபவித்து வருகிறார்கள். இக்கிராம சேவையாளர்பகுதி இவ்வேலையை திருநெல்வேலி கிராமசேவையாளரிடம் ஒப்படைத்திருக்கிறது. எனது குடும்ப அட்டையில் எனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பிழையாகப் பதிந்துவிட்டார்கள். இதைத் திருத்தித்தரும்படி உப அரசாங்க அலுவலகத்திற்குக் கொடுத்தேன். பல தடவையாக உ. அ. அலுவலகத்திற்கும், கிராம சேவையாளரிடமும் சென்று கேட்ட பொழுதில் இன்னும் ஏதோ ஒட்டவில்லை என்று கூறுகிறார்கள்.

இக்கிராம மக்களுக்கு வீட்டுச் சாமான்கள் (பாத்திரம்) பங்கீட்டு முறையும் சரியான முறையில் நடைபெறவில்லை என்று மக்கள் கவலையும் படுகிறார்கள். நல்லூர் உ. அ. அதிபர் வேண்டியநடவடிக்கை எடுப்பாரா?

பாதிக்கப்பட்டவர்,
சந்நிதமடம்.

## சமய அந்திகளில்

### செபமாலை மாதா திருநாள்

யாழ்ப்பாணம், செப்: 20

யாழ். கொழும்புத்துறை பரிசுத்த செபமாலை அன்னை ஆலய திருவிழா 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 4 45 மணிக்கு வழிபாடுகள் நடைபெறும். 30 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை விழா திருப்பலியும் நற்கருணை பவனியும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு முதற்பூசையும் 7 மணிக்கு இரண்டாம் பூசையும் மாலை 4.30 மணிக்கு திருச்சொருபபவனியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் ஆசிரும் இடம் பெறும். (க)

### புனித மிக்கேல் தேவாலய உற்சவம்

பச்சிலைப்பள்ளி, செப். 20

இளாலி புனித மிக்கேல் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் இன்று புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தினமும் நவநாள் ஆராதனை நடத்தப்படும்.

கூட்டுத்திருப்பலி ஆராதனை 28 ஆம் திகதி மாலையும், மறு நாள் வெள்ளிக்கிழமை காலை திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

நவநாள் ஆராதனைகளை மிருசுவில் பங்குத்தந்தை அருட்திரு லோறன்ஸ் சேவியர் அடிகளார் நடாத்துவார். (க-117)

## கண்டதும் கேட்டதும்

பொருள்களைத் தொலைப்பவர்களுக்கு ஏற்படும் மனக்கவலை எத்தகையது என்பது அனேகமாக எல்லோருக்கும் தெரிந்ததே.

அது திருட்டாக இருந்துவிட்டால், எத்தனை பேர் மீதோ எல்லாம் சந்தேகம் ஏற்படும். அவராக இருப்பாரோ, இவராகவும் இருக்கலாம் என்று பலரைக் குற்றவாளிகளாக்க மனம் முனையும்.

அதனால் தான் பாட்டிமார் களவு எடுத்தவனுக்கு ஒரு பாவம். கொடுத்தவனுக்குப் பல பாவம் என்பார்கள் திருடாதவர்களையும் குற்றவாளிகளாக மனம் பழிசுமத்துவதும் ஒரு பாவமே!

தொலைத்த பொருள்களைக் கண்டு எடுப்பவர்களுக்கும் பல சங்கடங்கள் இருப்பது உண்டு. அந்தப் பொருளை தானே எடுத்து விடலாமா அல்லது பெருந்தன்மையுடன் உரியவரிடம் ஒப்படைத்து விடுவோமா என்று மனதில் சலனம்.

கண்டெடுத்த பொருளை உரியவரிடமே ஒப்படைக்க நினைத்தாலும் உண்மையான உரித்தாளியை எப்படிக் கண்டு பிடிப்பது என்பது கஷ்டமானது.

இந்தச் சங்கடம் மாங்குளம், துணுக்காய் வீதியில் உள்ள ஜெய்கிருஷ்ணு பண்ணையைச் சேர்ந்த திரு. மு. பொன்னம்பலம் எனபவருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

மாங்குளம் மக்கள் வங்கியில் அனேகமாக ஜூலை மாத 27 ஆம் திகதிக்கும் பின்னர் பெற்ற நிவாரணப் பணத்தை ஒருவர் தொலைத்து விட்டார். உண்மையான உரியவரைக் கண்டு பிடிக்க முடியவில்லை. எவரும் உரிமை கோரியும் வரவில்லை.

ஒரு மாதமாகப் பணத்தை வைத்துக் கொண்டு எப்படி உரியவரைக் கண்டு பிடிப்பது என சங்கடப் படுகிறார் திரு. பொன்னம்பலம்.

உரிமை கோர வருபவர் உண்மையாகவே பணத்தைத் தொலைத்தவர் தானா என்பதை கண்டறியச் சில துப்புகளும் அவரிடம் உண்டு.

உண்மையான உரிமையாளர் யார் என்று தொடர்ந்தும் அவர் தேடிக் கொண்டிருக்கிறார்!

— செய்திலோலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



### குலசிங்கம் ராஜ்குமார்

(Union Trust and Investments Ltd, Jaffna Branch)

மலர்வு: 09 - 02 - 1964 | உதிர்வு: 28 - 03 - 1989

திதி: 20 - 09 - 1989

சிறிது காலமே வாழ்ந்தாய்
பெரியவை செய்தாய்
உள்ளூரில் பழுத்த பயன்மரமானாய்
யார்க்கும் உதவும் பண்பு கொண்டாய்
மலர்ந்த வதனமும் கனிந்த சொல்லும்
அன்புள்ளத்தின் பிரதிபலிப்பென யாரும்
சொல்ல வாழ்ந்து மறைந்தாய்
இறையடியில் நீ சாந்தி பெறவும்
உன்னைப் பிரிந்த நாம் அமைதி
பெறவும் பிரார்த்திக்கும் —

பப்பா, அம்மா,
தம்பி, தங்கை,
உற்ருர், உறவினர்,
நண்பர்கள்;

மயிலாகம் வீதி,
கட்டுவன்,
தெல்லிப்பழை;

(2368)

## 3ஆம் மாத நினைவஞ்சலி



### செல்வி பவானி நல்லையா (நித்திலா)

தாயின் மடியில்: 06 - 02 - 1966 | மண்ணின் அடியில்: 26 - 06 - 1989

திதி: 22 - 09 - 1989

ஆசை மகளே! அன்புச் செல்வமே!
படைத்தவன் கல்வி, செல்வம், வீரம்
மூன்றையும் தந்தான்
எங்கள் குடும்பத்து முதல் தீபமே!
பல்கலைக்கழகம் சென்ருய் இது!
அம்மாவின் ஆசைக்கு என்ருய்!
உனது பந்த பாசங்கள், உற்ருர், உறவினர்,
எல்லாவற்றையும் மறந்தாய்!
உன்னைப் பெற்ற பாவிகளுக்கு
நீ சொன்ன வார்த்தைகள் மறக்க முடியாதம்மா!
உன் பிறந்த தம்பிமார்களுக்கு
எங்களுக்கு அக்கா இல்லையே என்ற தவிப்பு!
எல்லோரையும் மறந்து வானகம் சென்ருயோ?
உன் காளை மரணத்தை கேட்டு அதிர்ச்சியடைந்தோம்
அஞ்சியவனுக்குச் சதா மரணம்
அஞ்சாதவனுக்கு மரணம் ஒன்றே - அங்ஙனமே
உன் இம் மரணமும் அமைந்ததோ?
இனி, நாங்கள் உன்னை எங்கே காண்பதம்மா?

எங்கள் மகள் மறைந்த செய்திகேட்டு எங்களுக்கு ஆறுதல்கூறி வருகை தந்த, ஆசிரியர்கள், மாணவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் 1989-09-22 அன்று வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்;

தனிப்பட்ட அறிவித்தல் இல்லை;

உன் பிரிவால் துயருறும்:
அப்பா. அம்மா, தம்பிமார்,
நண்பர்கள், உறவினர்கள்;

"பவானி அகம்"
க. நல்லையா, கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

[2386]

# தொலைக் கல்வி பயிற்சி நெறி மூலம் புதிய ஆசிரியர் பயனடைகிருர்கள்

### உதவிக் கல்வி அதிகாரி உரை

கொக்குவில், செப்20

வருடாந்தம் 2,000 ஆசிரியர்கள் வேலையை விட்டு நீங்குகிருர்கள்; புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிருர்கள்: இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்:

வழமையான ஆசிரிய பயிற்சிக் கலாசாலைமூலம் இதனை நிவர்த்தி செய்ய முடியாதெனக் கருதியே தொலைக் கல்வி பயிற்சி நெறிமூலம் இப் பயிற்சி வழங்கப்படுகிறது.

வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற தொலைக் கல்வி மத்திய நிலைய அங்குரார்ப்பண வைபவத்தில் உரையாற்றிய பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்வி அதிகாரி திரு: இ. சிவானந்தன் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் கல்வித் திணைக்கள கல்வி அதிகாரியும், தொலைக் கல்வி பயிற்சி நெறி இணைப் பதிகாரியுமான ஜனுப் எம்; ஏ. சி; எம்: இனுனா தலைமையில் இவ்விழா நடைபெற்றது:

பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி தி; பெரியதம்பி ஆசிரியர்கள் தமது அறிவு, திறன், மனப்பாங்கினை சிரிய முறையில் வளர்த்து மாணவர்களை சரியான முறையில் வழிகாட்ட வேண்டும்' என்று கூறினுர்:

வேலணைக் கோட்டக் கல்வி அலுவலக உப கல்விப்பணிப்பாளர் திரு: சி. புலேந்திரன் தமது உரையில், பல வெளி நாடுகளில் இத்தொலைக் கல்வி நெறிமுறை நடைபெற்ற போதும் இது தொடங்கியது நம்நாட்டில்தான் என்று கூற வேண்டும்: பிராமணக் கல்வி முறை பௌத்தக் கல்விமுறை போன்றனவே தொலைக் கல்வி முறையின் முன்னேடியாகும் என்ருர்.

பயிற்சி பெற்று வெளியேறிய ஆசிரிய மாணவரான திரு: சிவகுமார் வரவேற்புரை நிகழ்த்தினுர்; (இ-69)

## 8ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி



### திரு. யோசப் திருஞானதீபன் (தாசன்)

மலர்வு: 06 - 03 - 1959 | உதிர்வு: 13 - 09 - 1989

மன்னுர் புகையிரத நிலைய அருகாமையில் யோசப் திருஞானதீபன் கடந்த (13 - 09 - 1989) அன்று அகால மரணமடைந்தார்; அன்னுர் லிங்கேஸ்வரி அடேலாவின் அன்புக் கணவரும், கீத், சஞ்சேய், அஞ்ஞெலட், ஜோயலா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோசப், மதலேனு ஆகியோரின் அன்புப் புதல்வனும், ராஜரட்ணம் (புகையிரதப் பகுதி), சிவசோதி ஆகியோரின் மருமகனும் ஆவார்;

அன்னுரின் நல்லடக்கம் கடந்த 14 - 09 - 89 அன்று சவுதிபார் சேமக்காலையில் நடைபெற்றது; இவ் அறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன்கேட்டுக்கொள்கின்ருேம்;

பெற்ருேர், மனைவி, மக்கள்,
சகோதரர், மைத்துனர்.

புகையிரத நிலைய அருகாமை,
மன்னுர்;

(2379)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



### நாராயணபிள்ளை சிவசுப்பிரமணியம்

(எழுதுவினைஞர் காணிப்பதிவகம் பருத்தித்துறை)

அன்னை மடியில்: 08 - 03 - 1938 | ஆண்டவன் அடியில்: 21 - 08 - 1989

அமைதியின் வடிவமே அன்பின் சிலாவே
கடமையில் வீசரே எண்ணியவானே
கனிவாய்ப் பேசி எம்மை வழிநடத்தினீரே

மருமான் சந்ததாசன் மைத்துனன் நந்தபாலா
மூவருமாக
ஒரேநாளில் சொர்க்கம் அடைந்தீரோ
இச் செய்தி கேட்டு துவண்டோம் அழுதோம்

உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்:
பருத்தித்துறை காணிப்பதிவக ஊழியர்கள்

(2397)

## நிவாரண உதவி

முல்லைத்தீவு, செப்; 20

முல்லைத்தீவு களம்பில் வீதி 5 ஆம் 6 ஆம் கட்டைக்கிடையில் 28 ஆம் திகதி எரிக்கப்பட்ட 22 வீட்டுக்காரருக்கும் தாக்கப்பட்ட வீட்டுக்காரரான திருமதி ரி. எஸ்; தியாகலிங்கம், க. மகேந்திரன், வே. சிவனடியான் ஆகியோருக்கும் விரைவில் நிவாரண உதவிகளை வழங்க முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு: வி: சுந்தசாமி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேற்படி வீடுகளின் நஷ்ட அறிக்கையை களப்பிக்கிராம சேவை உத்தியோகஸ்தர் திரு: அ: செல்வரத்தினம் உ: அ: அதிபரிடம் சமர்ப்பித்துள்ளார்; (க-92)

## பெ. வெங்காயம் 12.50 சதத்துக்கு கொள்முதல்

கொழும்பு. செப்; 20

மூவாயிரம் மெட்ரிக் தொன் பெரிய வெங்காயத்தை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்ய கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது:

விவசாயிகளிடம் இருந்து வெங்காயம் ஒரு கிலோ 12 ரூபா 50 சதம் வீதம் கொள்முதல் செய்யப்படும்; (ஒ-எ)

## கோரிக்கை

கொழும்புத்துறை செப்: 20

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கல்வி அமைச்சுச் செயலாளரைக் கோரியுள்ளார்:

அண்மையில் இடம்பெற விருக்கும் ஆசிரியர் தெரிவில் இப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். இது சம்பந்தமாகக் கல்வி அமைச்சுச் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

(க - 30)

## கொத்தணி அதிபர்

பண்டத்தரிப்பு செப்; 20

சுழிபுரம் கொத்தணி (விக்ரோறியாக் கல்லூரி) அதிபராக திரு: பத்மநாதன் நியமனம் பெற்றுள்ளார்:

இவர் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரியில் 25 வருடங்கள் ஆசிரியாரகக்கடமை புரிந்தார் என்பதும் காரைநகர் இந்துக்கல்லூ, களைநகர் யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பணிபுரிந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது (க - 120)

## முல்லை. ஸ்ரார் சாம்பியன்

மாங்குளம் செப்; 29

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கு உட்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் முல்லைத்தீவு ஸ்ரார் விளையாட்டுக்கழகம் சாம்பியனுகத்தெரிவு செய்யப்பட்டது: (க - 94)


நோர்வேயின் ஒஸ்லோ
தமிழ் நாதம்
வானெலி நிலையம் நடாத்தும்

## தமிழ்நாதம் கலைப்போட்டி-1989

இவ்வாண்டுக்கான போட்டி அம்சங்கள்

★ கவிதை & வானெலி நாடகம் ★

மொத்த பரிசுத் தொகை 3600/-

ஒவ்வொரு போட்டி அம்சத்துக்கும் மூன்று பரிசுகள்

1 ஆவது பரிசு 1000/-
2 ஆவது பரிசு 500/-
3 ஆவது பரிசு 300/-

போட்டி முடிவு: 30 — 11 — 1989

போட்டி விதிகள்

1; ஒரு போட்டியாளர் ஒவ்வொரு போட்டி அம்சத்துக்கும் தலா இரண்டு ஆக்கங்கள் மட்டுமே அனுப்பமுடியும்;
2; கவிதைகள் 12 வரிகளுக்கு குறையாமலும் 28 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்
3; வானெலி நாடகம் இடை இசை ஏதுமின்றி 10 முதல் 30 நிமிடங்கள் வரை ஒலிக்கக் கூடியதாக இருக்கலாம்.
4; தமிழ் நாதம் நியமிக்கும் நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது;

போட்டி முடிவுகள் இதே பத்திரிகையில் பிரசுரமாகும்;

குறிப்பு:
போட்டிக்காக வரும் தரமான படைப்புகள் உங்கள் பெயர் முகவரியுடன் ஒலிபரப்பாகும்; இவை தவிர தத்துவச் சிறுகதை, மணிமொழிகள், விடுகதைகள்; நகைச்சுவைத் துணுக்குகள், இலக்கிய விமர்சனங்கள், கட்டுரைகள் என்பன வரவேற்கப்படுகின்றது;

உங்கள் படைப்புக்களை அனுப்பவேண்டிய முகவரி:

**Tamil Natham**
**Radio Immigrantan**
Post Box - 244,
0103, Oslo - 1
**Norway.**

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் | கலை - 89 | என குறிப்பிடவும்.

[2200]


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்:

### காசிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை

மலர்வு: 26 - 12 - 1939 | உதிர்வு: 30 - 09 - 1988

திதி: 20 - 09 - 1989

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து வருடம் ஒன்ருகி விட்டதெனினும் உங்கள் கனிவான புன்னகையும் பொன்மொழியும் எம் இதயத்தை என்றும் வாட்டிக்கொண்டிருக்கின்றது; உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சி நிற்கும்;

மனைவி, பிள்ளைகள்.

9 அரசடி லேன்,
நெடுங்குளம் ரோட்,
அரியாலை;

(2393)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்தில் தீவிரமடையும் பிரிவினைவாதம்; கட்டுப்படுத்த கோர்பச்சேவ் தீவிர நடவடிக்கை!

## கம். கட்சி மத்திய செயற்குழுவின் விசேட கூட்டத்தில் ஆராய்வு

மாஸ்கோ, செப் 19 சோவியத் சமஷ்டி அமைப்பு பிளவுபட அனுமதிக்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி கோர்பச்சேவ் திட்டவட்டமாக அறிவித்து விட்டார்.



கோர்பச்சேவ்

பிரிந்து செல்ல அனுமதிக்குமாறு பால்டிக் குடியரசுகள் விடுத்த வேண்டுகோளை கோர்பச்சேவ் நிராகரித்து விட்டார்.

கோர்பச்சேவ் மேலும் சொன்னதாவது:

மாநிலக் குடியரசுகளுக்கும் மாநிலக் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் கூடுதல் அதிகாரங்களை வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது.

சொந்த விவகாரங்களைத் தாங்களே நிர்வகிக்கக்கூடிய அளவு சுதந்திரம் வழங்கப்படும்.

சகல பிரச்சினைகளுக்கும் கூட்டு முயற்சி மூலமும் சோவியத் சமஷ்டி அமைப்பின் கீழும் தீர்வு காணப்பட வேண்டும். சமஷ்டியில் இருந்து எந்த மாநிலமும் பிரிந்துபோக அனுமதி வழங்கப்படமாட்டாது.

இப்படி ஜனாதிபதி கோர்பச்சேவ் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார்.

பால்டிக் குடியரசுகளான எஸ்தோனியா, லட்வியா, லித்துவேனியா ஆகியன சமஷ்டி அமைப்பில் இருந்து பிரிந்துபோகும் உரிமை கோரி போராடி வருகின்றன.

இதனிடையில் — சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுவின் விசேட கூட்டம் இன்று (செவ்வாய்க்கிழமை) கூடியது.

வளர்ந்துவரும் பிரிவினைவாதத்தை எப்படிக் கட்டுப்படுத்துவது என்பதுபற்றி இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. (எ)

# உலக உப்பு உற்பத்தி; 3 இல் 1 பங்கு சீனாவில்!

டோக்கியோ, செப் 19 உலக மக்களுக்குத் தேவையான உப்பில் மூன்றில் ஒரு பங்கை சீனா உற்பத்தி செய்கிறது.

பத்து பாவனைப் பொருட்களை உற்பத்தி செய்யும் மிகப் பெரிய நாடாக சீனாவே இன்று உலகில் விளங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

சைக்கிள், குளிர் சாதனப் பெட்டி, தையல் இயந்திரங்கள், மின்சார சாதனங்கள், பென்சில்கள் டெலிவிஷன் பெட்டிகள் ஆகியனவற்றின் உற்பத்தி பல மடங்காக சீனாவில் அதிகரித்துள்ளது. (எ)

# போடிநாயக்கனூர் நிலை; பூட்டாசிங் விசாரணை!

போடிநாயக்கனூர் கலவரம் பற்றி நேர்முக விசாரணை நடத்த அ. தி. மு. க. குழு ஒன்றை அதன் பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நியமித்திருக்கிறார்.

இதனிடையில், 21 பேரை பலி கொண்ட போடிநாயக்கனூர் கலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் பூட்டாசிங், முதலமைச்சர் கருணாநிதியுடன் டெலிபோனில் பேசினார்.

கலகத்தை அடக்க மத்திய அரசு உதவும் என்று அமைச்சர் பூட்டாசிங் உறுதியளித்தார்.

வருகிற 27 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த தனது 3 நாள் போடி நாயக்கனூர் விஜயத்தை குழப்பியடிக்கவே கலவரத்தை அக்கறையுள்ள சக்திகள் தூண்டி விட்டன என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா குற்றம் சாட்டியுள்ளார். (எ)

## மோதலை உண்டுபண்ணிய

# மானபங்கக் குற்றச்சாட்டு; சபாநாயகர் ராஜினாமா!

## கோவா மாநிலத்தில்

பனாஜி, செப் 19 பெண் ஊழியர் ஒருவரை மானபங்கம் செய்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து கோவா மாநில சபாநாயகர் தயானந்த் நர்வேகர் ராஜினாமாச் செய்தார்.

சபாநாயகர் அறையில் வைத்து செல்வி சுனிதா ஹல்தங்கார் என்பவரை மானபங்கம் செய்ததாக குற்றஞ் சுமத்தப்பட்டது.

சபாநாயகர் இதன் காரணமாக ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரி 70 வயது விடுதலை வீரர் விநாயக் பாடியர் மற்றும் இரண்டு பெண்களும் சாகும்வரை உண்ணாவிரத இயக்கத்தை ஆரம்பித்தனர்.

சபாநாயகரின் ராஜினாமாவைத் தொடர்ந்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. (எ)

# ஆப்கன் முன்னாள் மன்னர் ஷா நவம்பரில் பாக். விஜயம்!

இஸ்லாமபாத், செப் 19 ஆப்கனிஸ்தானில் இருந்து சமாதானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட முன்னாள் மன்னர் ஸாஹிர்ஷா முன்வந்திருக்கிறார்.

மன்னராட்சி முறை ரத்துச் செய்யப்பட்ட பின்னர் ஸாஹிர்ஷா இத்தாலி சென்றார்.

அங்கு இப்போது அஞ்ஞாத வாசம் செய்து வருகின்றார்.

சோவியத் படைகள் விலக்கப்பட்ட பின்னர் ஆப்கனில் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வர உதவும்படி ஸாஹிர்ஷாவுக்கு முதலில் சோவியத் யூனியன் அழைப்பு விடுத்தது அதை அவர் ஏற்கவில்லை.

இரண்டாம் தடவையாக அமெரிக்க அரசு அவருக்கு அழைப்பு விடுத்தது. இப்போது அவர் அதனை ஏற்று இருக்கிறார்.

நவம்பர் மாத முற்பகுதியில் மன்னர் ஸாஹிர்ஷா இஸ்லாமபாத்திற்கு விஜயம் செய்ய இருக்கிறார்.

இதற்கான விஸா அவருக்கு வழங்க பாகிஸ்தான் அரசு கொள்கையளவில் ஒத்துக் கொண்டிருக்கிறது.

இஸ்லாமபாத்தில் தங்கியிருந்து முஜாஹிதீன் இடைக்கால அரசுத் தலைவர்களுடன் மன்னர் ஷா தொடர்பு கொண்டு அமைதித் தீர்வு காணும் வழி பற்றி ஆராய்வார். என்று பாகிஸ்தான் 'ஜாங்', உருது நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

# விண்வெளிக்குச் செல்லும் ஜப்பான் பத்திரிகையாளர்

டோக்கியோ, செப் 19 ரஷ்ய ராக்கெட்டில் விண்வெளிக்குச் செல்ல ஜப்பான் டி. வி. நிறுவனம் ஏழு பத்திரிகையாளர்களை தேர்ந்தெடுத்துள்ளது.

வரும் 91ஆம் ஆண்டில் ரஷ்யா-ஜப்பான் கூட்டுவிண்வெளிப்பயணம் நடைபெற உள்ளது. இதில் ஜப்பான் சார்பாக செல்பவர்களை ஜப்பான் டி. வி. நிறுவனம் தேர்ந்தெடுத்துள்ளது. அவர்கள் அனைவரும் நிருபர்கள்.

ஏழு பேரும் இந்த ஆண்டு இறுதியில் பயிற்சிக்காக ரஷ்யா செல்வார்கள்.

ஏழு பேரில் ஒருவருக்கு 72 வயது. இன்னொருவருக்கு 44 வயது மேலும் 2 பேர் பெண்கள்.

இவர்களில் 2 பேர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் இறுதிப் பயிற்சிக்குப் பின் அவர்களில் ஒருவர் விண்வெளிக்குச் செல்வார். அவர் தனது பயணத்தின் போது தினமும் விண்ணில் இருந்து செய்தி அனுப்புவார். (எ)

# வீடு இல்லாத அரசர்

ஜப்பான் மன்னர் ஹிரோஹிட்டோவிற்கு சொந்தமாக ஜப்பானில் ஒரு வீடு கூடக் கிடையாது.

ஜப்பான் நாட்டில் உள்ள அரண்மனை, நிலம், பண்ணை ஆகியவற்றை ஜப்பான் அரசு தனது பொறுப்பில் வைத்துள்ளது. பராமரிப்புச் செலவையும் அரசே செய்கிறது. ஆனால் அந்தச் சொத்துக்களை ஜப்பான் மன்னரும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே அனுபவிக்க முடியும்.

# தாட்சர் ஜப்பானில்

டோக்கியோ செப் 19 பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சர் ஜப்பானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று டோக்கியோ போய்ச் சேர்ந்தார். (எ)

# ஆஸ்திரேலியா எதிர்ப்பு

பெண்கள் பாதிரியார்களாக வர ஆஸ்திரேலியாவில் இரண்டாவது முறையாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் ஆங்கிலிச்சன் திருச்சபையால் முறியடிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவில் பெண்களையும் பாதிரியார்களாக நியமிக்கவேண்டுமென ஜேனட் ஸ்காரிப் என்றபெண் பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆங்கிலிக்கன் திருச்சபைப் பொதுக்குழுக் கூட்டம் (சினட்) பிஷப்புகள், மதகுருமார்கள், நிர்வாகிகள் 200 பேர் பொதுக்குழுவில் கலந்து கொண்டனர்.

பாதிரியார்களாக பெண்களையும் நியமிக்க திருச்சபை விதிகளைத் திருத்தும் மசோதா விவாதத்துக்கு வந்தது.

அனைவரும் இந்த மசோதாவை எதிர்த்தனர். இதனால் பெண்கள் பாதிரியாராக வாய்ப்பு மீண்டும் தடைபட்டது. (எ)

# ஆசிய விமான சரித்திரத்தில் இந்தியப் பெண்கள் சாதனை!

பம்பாய் செப். 19 ஆசிய விமானசேவையின் சரித்திரத்திலேயே இந்தியப் பெண்கள் கடந்த சனிக்கிழமை சாதனை ஒன்றைபடைத்தனர்.

இந்தியா எயர்லைனஸுக்கு சொந்தமாக போயிங் 737 ஜெட்விமானம் ஒன்றைபெண்கள் மட்டுமே ஓட்டிச் சென்றனர். இதுவே அச் சாதனை ஆகும்.

பம்பாயில் இருந்து கோவாவுக்கு இந்த விமானத்தை ஓட்டிச் சென்ற பெண் விமானிகளின் தலைமை விமானியாக சப்டன் சௌதாமினி தேஷ்முக் பணிபுரிந்தார்.

இவருடன் செல்வீகள் சரளவதிஜயர், ஜோசலைன்ஜோஷி, விரமிதைவாலா, ஷரதாவாரல் ஆகியோரும் சென்றனர்.

சௌதாமி நிவேதபாலின் என்ற பெண் விமானியுடன் எப் 27 ரக விமானம் ஒன்றை 1985 இல் கல்கத்தாவில் இருந்து டிப்ருகல் என்ற இடத்திற்கு ஓட்டிச் சென்று சாதனை புரிந்தார்.

பின்னர் கப்டன் சௌதாமினி செய்தியாளர்களிடம் "இன்னும் விமானம் ஓட்டுவது ஆண்களின் தொழில்தான். இன்று ஒவ்வொரு பெண்ணும் விமானியாக வர விரும்புகிறாள்" - என்று சொன்னார். (எ)

# ஒரு வியட்நாம் சிறுமியின் நெஞ்சில் நிறைந்த நினைவுகள்

நாட்டை ஆள்பவர்களின் விருப்பு, வெறுப்புகளால் ஏற்படும் போரின் பயங்கரம் மிகவும் கொடூரமானது என்பதை மிகவும் தத்ரூபமாக விளக்கும் அசோஸியேடட் பிரஸ் செய்தி நிறுவனத்தின் புகைப்படக்காரர் நிக் வுட் எடுத்த படம் உலக மக்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

அது 1972 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தில் ஒரு நாள்.

அமெரிக்க விமானங்கள் திடீரென்று வியட்னாம் மீது குண்டுகளைப் பொழிந்துவிட்டு வந்த வேகத்தில் மறைகின்றன.

ஆபத்தை உணர்ந்த மக்கள் திசை தெரியாமல் ஓடுகின்றனர்.

ஒன்பதே வயதான சிறுமி பான் தி கிம் புக்கும் அவர்களில் ஒருத்தி.

உயிர்பிழைக்கத் தப்பியோடும்போது அவளது உடைகளில் தீப்பிடிக்க அவற்றை நிராகரித்துவிட்டு ஓடுகிறாள் அந்தச் சிறுமி.

இந்தக் கோலத்தைத்தான் நிக் வுட் படமெடுத்திருந்தார்.

உலகில் நடக்கும் அத்தனை போர்களின் கொடூரங்களையும் விளக்கும் அந்தச் சிறுமியின் பயம் நிறைந்த முகம், அந்தப் புகைப்படக்காரருக்கு 'புலிட்சர் விருதைப்' பெற்றுத் தந்தது.

வியட்னாம் மக்களின் துன்பங்களை உலகுக்கு எடுத்து உரைக்கும் வகையில் உலகம் முழுவதும் பத்திரிகைகள் இந்தப்படத்தை முதல் பக்கத்தில் வெளியிட்டன.

ஒன்பது வயதுச் சிறுமியாக அந்தப்படத்தில் உள்ள பான் தி கிம் புக் இன்று 26 வயது இளம் பெண்ணாக வளர்ந்திருந்திருக்கிறார்.

ஒற்றுமை, நம்பிக்கை ஆகிய செய்திகளுடன் இவர் விரைவில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

"அந்தச் சிறுமியின் முதுகு, கழுத்து, கைகள் ஆகியவை தீயில் கருகியிருந்தன" என்று புகைப்படக்காரர் நினைவு கூர்ந்தார்.

"எக்கச்சக்கமான வெப்பம் இருந்தது. நான் ஓடினேன், ஓடினேன். ஓடிக்கொண்டே இருந்தேன். தீப்பிடித்த என் உடைகளைக் கிழித்து எறிந்த பின்னரும் எரிச்சல் குறையவில்லை" என்று அந்த தினத்தைப் பற்றி பான் தி கிம் புக் கூறுகிறார்.

"இந்தப் புகைப்படம் போலியானது" என்று வியட்னாமில் இருந்த அமெரிக்கப் படைகளின் தளபதி ஜெனரல் வில்லியம் வெஸ்ட்மோர் லேண்ட் குற்றஞ்சாட்டினார்.

பான் தி கிம் புக்கும், நிக் வூட்டும் 17 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த மாதம் 24 ஆம் திகதி ஹவானாவில் சந்தித்தனர்.

எனது போர்க்கால நினைவுகளை அமெரிக்கர்களுடன் பகிர்ந்துகொள் நான் அமெரிக்கா வரவில்லை. புகைப்படத்தில் பார்த்த பெண்ணை அமெரிக்கர்கள் நேரில் பார்க்க வேண்டும் என்பதற்காகவே "இந்தப் பயணம்" என்று பான் தி கிம் புக் கூறியிருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள [illegible] பார்க்கவும் தான் விரும்புவதாக அவர் சொன்னார்.

இந்தப் [illegible] காவில் தங்கிப்படிக்கவும், சிகிச்சை பெறவும் அவர் விரும்புகிறார். (எ-4)

# கேள்வி அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம் - கிளிநொச்சி

### ஆசிய அபிவிருத்தி வங்கி - கல்விப் புனருத்தாபனத் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கட்டிட வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1989ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி (1989-10-05) வியாழக்கிழமை காலை 11மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கும் அதன் எதிரே உள்ள தொகைக்கும் அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலை செய்வதற்கெனக் கல்வித் திணைக்களம் கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசன திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1989ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ஆம் திகதி (1989-09-29) பிற்பகல் 2 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்விப் பணமாக (ரூபா 250/-) ரூபா இருநூற்றி ஐம்பதும் செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிக் கல்வித்திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியன கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1989ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி காலை 11.30 மணிக்குக் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச் சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் இது பற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும். தவறின் மறு அறிவித்தலின்றி தெரிவு இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் வேலைக்கான கால அட்டவணைப்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக்கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. கந்தசாமி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி. 1989-09-20

| | பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 01. | கிளி/திருவையாறு அ. த. க. பா | பெருந்திருத்த வேலை | ரூபா 100,000/- |
| 02. | கிளி/வட்டக்கச்சி தெற்கு அ. த. க. பாடசாலை | பெருந்திருத்த வேலை | ரூபா 150,000/- |
| 03. | கிளி/கிளிநொச்சி இந்து ம. வி. | பெருந்திருத்த வேலை | ரூபா 350,000/- |
| 04. | கிளி/பரந்தன் இந்து ம. வி. | பெருந்திருத்த வேலை | ரூபா 300,000/- |
| 05. | கிளி/நாச்சிக்குடா அ. மு. க. பா | பெருந்திருத்த வேலை புதிய மலசல கூடமும் இரண்டு சல கூடமும் அமைத்தல் | ரூபா 150,000/- |
| 06. | கிளி/ஆனைவிழுந்தான் அ. த. க. பா | பெருந்திருத்த வேலை புதிய மலசல கூட அமைத்தல் | ரூபா 150,000/- |
| 07. | கிளி/முருகானந்தா ம. வி | பெருந்திருத்த வேலை | ரூபா 350,000/- |
| 08. | கிளி/தர்மபுரம் இல 1 அ. த. க பாடசாலை | பெருந்திருத்த வேலை புதிய மலசல கூடம் அமைத்தல் | ரூபா 100,000/- |
| 09. | கிளி/இராமநாதபுரம் மேற்கு அ. த. க பா | பெருந்திருத்த வேலை புதிய மலசல கூடம் அமைத்தல் | ரூபா 100,000/- |
| 10. | கிளி/கனகபுரம் அ. த. க. பா | பெருந்திருத்த வேலை இரண்டு புதிய மலசல கூடம் அமைத்தல் | ரூபா 150,000/- |
| 11. | கிளி/முருகானந்த ம. வி | 50'/25' பகுதி மேல் மாடிக் கட்டிடம் அமைத்தல் | ரூபா 350,000/- |
| 12. | கிளி/ஞானிமடம் அ. த. க. பா | பெருந்திருத்த வேலை புதிய இணையும் புதிய சலகூடமும் அமைத்தல் | ரூபா 100,000/- |
| 13. | கிளி/பரமன்கிராய் அ. த. க. பா | பெருந்திருத்த வேலை புதிய இணையும் இரண்டு சல கூடமும் ஒரு மலகூடமும் அமைத்தல் | ரூபா 135,000/- |

க. கந்தசாமி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(கி-3346)

# முதலாம் ஆண்டுநினைவு அஞ்சலி



C. H. ராஜாராம்
(எஸ். பி. சாமி. அன். கம்பனி முன்னாள் கணக்காளர்)

தோற்றம்: 29 - 10 - 1929    மறைவு: 01 - 10 - 1988

ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் இன்முகம் காணாமல் தவிக்கின்றோம்? கலங்குகின்றோம்? வருஷாப்திய தினமாகிய இன்று உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரன், மாமா, மாமி, மைத்துனர், மைத்துனிமார்.

நீர்வேலி வடக்கு.
நீர்வேலி.    (கி/3349)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/50
நெகட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak, Fuji, Konic.
Tudor Fort B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

20 : 09 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## ஆசிரியர் எண்ணிக்கையை அதிகரிக்க நிதி இல்லையாம்

### திறைசேரி கைவிரித்துவிட்டது

கொழும்பு, செப்: 20

பயிலுநர் ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நிதிவசதி இல்லை என்று திறைசேரி கல்விச்சேவைகள் ஆணைக்குழுவுக்குத் தெரிவித்துள்ளது.

25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர்களைத் திரட்டுவது என்று அமைச்சு முன்னர் தீர்மானித்து இருந்தது.

இந்த எண்ணிக்கையை 10 ஆயிரத்தால் அதிகரிக்கும்படி கல்விச்சேவைகள் ஆணைக்குழு திறைசேரியைக் கேட்டிருந்தது என்பது தெரிந்ததே. (ஓ-எ)

## ரூபா நாலாயிரம் நாளை நிவாரணம்

யாழ்ப்பாணம், செப்: 20

கொழும்புத்துறை (ஜே/35) கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 366 குடும்பங்களுக்கு உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப்பணம் ரூபா நாலாயிரம் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவிருக்கிறது.

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் காலை 8 மணி முதல் இக் கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-8)

★ ஜனசக்தி திட்ட அமுல்:

## 6,400 சான்றிதழ்கள் யாழ். வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், செப் 20

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜனசக்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்காக முதலில் தெரிவு செய்யப்பட்ட தொகுதியினருக்கான 6,400 உரிமைச்சான்றிதழ்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பில், தேசிய சேமிப்பு அலுவலகத் தலைமை அலுவலக அதிகாரிகள் பிரதாப உரிமைச் சான்றிதழ்களை நேற்று யாழ்ப்பாணம் கொண்டு வந்து சேர்த்தனர். தபாலகங்கள் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகிப்பதற்காக, அவை யாழ். பெரிய தபால் அலுவலகத்தில் மொத்தமாக ஒப்படைக்கப்பட்டன.

ஜனசக்தி திட்டத்தை அமுல் செய்யும் நடவடிக்கையின் ஆரம்பக் கட்டமாக, யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 6,400 பேர் தெரிவு செய்யப்பட்டது தெரிந்ததே. அவர்களுக்குரிய உரிமைச் சான்றிதழ்களே நேற்று யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்க்கப்பட்டன.

இவை யாழ். பெரிய தபாற் கந்தோர், சுண்டிக்குளி, வண்ணார்பண்ணை ஆகிய மூன்று தபாலகங்கள் மூலம் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

மகாத்மா காந்தியின் பிறந்த தினமான அக்டோபர் இரண்டாம் திகதி உரிமைச் சான்றிதழ்கள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (அ-10)

## வ. பி. போ. சபைக்கு ரூ. 20½ லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், செப் 20

வடக்குப் பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு வடக்கு, கிழக்கு மாகாண புனர் வாழ்வு அமைச்சு 20 லட்சத்து 66 ஆயிரம் ரூபாவை ஒதுக்கத் தீர்மானித்திருப்பதாக யாழ் மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு: எம். முருகநேசன் தெரிவித்தார்.

இந்நிதியைப் பயன்படுத்தி வடக்கு பிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்களுக்கான டயர், மற்றும் உதிரிப்பாகங்களைக் கொள்வனவு செய்ய முடியுமென்றும் சேவையாற்ற முடியாத நூற்றுக்கணக்கான பஸ்களை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

## பற்றைக் காட்டில் இயங்கிய அச்சகம் கண்டுபிடிப்பு!

கொழும்பு, செப் 20

பாணந்துறை பொலிஸ் பகுதியில் பக்கேம என்ற இடத்தில் பற்றைக் காட்டினுள் அச்சகம் ஒன்று செயல்படுவதை பொலீஸார் கண்டுபிடித்தனர்.

இதனிடையில்—

பம்பலப்பிட்டி உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த இரண்டு இளம் பெண்களை கடந்த சனிக்கிழமை ஆயுதம் தரித்த ஐந்து பேர் கடத்திச் சென்றனர்.

வத்தளையில் வைத்து அப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர் என்று பொலீஸாரிடம் முறையிடப்பட்டது. பொலீஸார் விசாரணை நடத்திவருகின்றனர். (உ-எ)

## கன்ரன்....

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

★ தமிழர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற கன்ரன் முறையிலான தன்னாட்சி அமைப்பாவது அவசியம்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த ஆலோசனைகளில் தெரிவித்தது.

ஐந்து எதிர்க்கட்சிகள் கொண்ட அணியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் (புளொட்) நேற்று ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாசாவைத் தனித்தனியே சந்தித்தன. அனைத்துக்கட்சி மாநாட்டுக்கான தமது யோசனைகளை அவை சமர்ப்பித்து கலந்தாலோசித்தன.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கும் எதிர்க்கட்சிகள் அணிக்கு எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தூதுக் குழுவுக்கு திரு: டி. சித்தார்த்தன் தலைமை வகித்தார்.

இரண்டு தூதுக் குழுக்களும் ஜனாதிபதியைச் சந்தித்த போது ஏனைய கட்சிகள் பலவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்துகொண்டனர். (அ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி சபாபதி மீனாட்சி

தோற்றம்: 01-04-1910 மறைவு: 20-08-1989

மீளாத்துயில் கொண்டு ஆறாத் துயர் தந்த அன்புத் தெய்வமே! கண்ணை மதித்தே என்றும் கனிவுடன் காத்து வந்தாய்! மண்ணை விடுத்துச் சென்றாய்! மயங்கியே அழுதோம் அன்று! விண்ணை அடைந்து விட்டாய்! விரும்பிய யாவும் தாராய்!

ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்:

மகள், மருமகன், சகோதரிகள், பெறுமக்கள், பேரப் பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்.

11 கிருப்பியடி லேன், யாழ்ப்பாணம். (2403)

## முதலில்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியவில்லை.

தென்பகுதி மாகாணசபைகளில் சுதந்திரக் கட்சி, ஜே. வி. பி ஆகியன இடம்பெறவில்லை.

வடக்கு, கிழக்கு மாகாண சபையில் விடுதலைப் புலிகள் இயக்கம், ஈரோஸ், புளட் ஆகியன இடம்பெறவில்லை.

இதனை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறவிருக்கிறோம்.

எமது இயக்கத் தூதுக் குழு எதிர்வரும் 28ஆம் திகதி ஜனாதிபதி பிரேமதாசாவைச் சந்தித்து எமது யோசனைகளைத் தெரிவிக்கவிருக்கிறது.

—இப்படி செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## திங்களன்று மாலையிலும் பருத்தித்துறையில் ஷெல்!

பருத்தித்துறை, செப்: 20

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) மாலையும் மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

முகாமில் இருந்து படையினர் வெளியே வர முயற்சித்த போதே அசம்பாவிதங்கள் தொடங்கியதாகக் கூறப்பட்டது.

அன்று காலையும் இவ்வாறான சம்பவம் ஒன்று இடம்பெற்றது தெரிந்ததே.

மாலை 3-30 மணியளவில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து தொடர் ஷெல் வீச்சுக்கள் நடத்தப்பட்டன. 'கிளைப்பர்' தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது மெத்தைக்கடை சந்தியில் நின்ற இளைஞர் ஒருவர் படுகாயமுற்றார். பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். ராஜன் (வயது 22) என்பவரே அந்த இளைஞர் ஆவார்.

அன்றிரவும் 8-30 மணி முதல் சுமார் 15 நிமிடங்கள் வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன. (ஓ-118)

## கம்பஹாவில் கார்க் குண்டு!

### நால்வர் பலி!

கொழும்பு, செப் 20

காரில் வைக்கப்பட்டிருந்த குண்டு ஒன்று வெடித்ததால் நால்வர் கொல்லப்பட்டனர். 20 பேர் வரையில் காயமடைந்தனர்.

ஒன்பதுபொலீஸாரும் இதில் காயமடைந்தனர்.

இச் சம்பவம் கம்பஹா பொலீஸ் நிலையத்திற்கு வெளியே நடந்தது. (ஓ-எ-க)

### அமைதிப்படை சென்ற பின்னர்

## மாற்று அமைப்பு அமைக்க பிரதமர் ராஜீவ் வலியுறுத்து

புதுடில்லி, செப் 20

அமைதிப்படை வெளியேறிய பின்னர் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுடைய பாதுகாப்பு, பத்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்தக் கூடிய மாற்று அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுத் தெரிவித்தார்.

இந்திய இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் தளபதிகள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய மாநாடு நேற்று நடந்தது.

அதில் பேசுகையில் பிரதமர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சகஜ நிலைமையைக் கொண்டுவர இந்திய அமைதிப்படையினர் ஆற்றிய பணியையும் பிரதமர் பாராட்டினார். (அ-எ)

## இளைஞரின்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் அந்த இளைஞர் மூன்று மணிநேரம் கிடந்தார். அதனால் காயங்களில் இருந்து பெரும் இரத்தப்பெருக்கு ஏற்பட்டது.

மிகத் தாமதமாகவே மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அந்த இளைஞரின் உயிரைக் காப்பாற்றுவதானால் பெருமளவு இரத்தம் தேவைப்படும் என வைத்தியர்கள் உணர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து பிரெஞ்சு வைத்தியக் குழுவைச் சேர்ந்த டாக்டர் ஜாக்குவின் அமைதிப் படையினரின் உதவியை நாடினார்.

காயமுற்ற இளைஞரின் உயிரைக் காப்பாற்ற உதவும் மனிதாபிமான எண்ணத்துடன் பல ஜவான்கள் இரத்ததானம் செய்ய முன்வந்தனர். அவர்களில் மூவரிடமிருந்து இரத்தம் பெறப்பட்டது. அது போதாமைக்கு பிரெஞ்சு வைத்தியக்குழுவைச் சேர்ந்த ஒருவரும் இரத்ததானம் செய்தார்.

ஜவான்களும், டாக்டரும் இரத்ததானம் செய்தபோதிலும் துரை வேலாயுதத்தின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை. அவரின் உயிர் பிரிந்து விட்டது. (அ-70)

[ஜவான்கள் இரத்ததானம் செய்தமை குறித்து அமைதிப் படையும் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது].

## சமாதானம் வேண்டி எத்தியாகமும் செய்வோம்

கொழும்பு, செப்: 20

சமாதானத்திற்காக ஒருவர் எந்த வித தியாகத்தையும் செய்யத் தயாராக இருக்க வேண்டும். மாற்றங்களை வெறுமனே புறக்கணித்துவிட முடியாது'

ஜனாதிபதி திரு: ஆர். பிரேமதாஸா நேற்று நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் வன்செயல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு சமாதானம் நிலைநாட்டப்பட வேண்டும் என்று மக்கள் ஆவல் கொண்டுள்ளனர்.

ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டமுடியும் என்ற நம்பிக்கையை சர்வகட்சி மாநாடு ஏற்படுத்தி உள்ளது —என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ஓ-எ)

## இரத்ததானம் குறித்து--

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாபிமான உணர்வுடன் புலோலி முகாமைச் சேர்ந்த ஜவான்கள் இரத்ததானம் செய்தனர்.

பிரெஞ்சு தொண்டர் அமைப்பினால் பருத்தித்துறையில் நடத்தப்படும் ஓர் ஆதார வைத்தியசாலைக்கு காயமுற்ற இந்த இளைஞனை உள்ளூர்வாசிகள் எடுத்துச் சென்றிருந்தனர்.

பிரெஞ்சு தொண்டர் அமைப்பின் இணைப்பாளர் [illegible] ஜாக்குவின் தொடர்பு கொண்டதைபடுத்து உயிர் காக்கும் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இளம் போராளியின் உயிரைக் காப்பாற்ற உதவுவதற்கு புலோலி முகாமைச் சேர்ந்த பத்து ஜவான்கள் தாமாகவே முன்வந்தனர்.

அந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிக்கு பொருத்தமான இரத்தத்தை [illegible] இரத்தத்தைத் தானம் செய்தார் [illegible] பட்டுள்ளது. (உ)

## ஆஸ்பத்திரி--

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

னுயிர்க் கிருமிகள் (பக்றீரியாக்கள்) இருக்கக் கண்டறியப்பட்டன.

ஆகையால் அந்தக் கிணறுகளின் நீரைக் குடிப்பதால் நோய்கள் வேகமாகப் பரவக் கூடிய ஆபத்து உண்டு என எச்சரிக்கப்படுகிறது. (அ-3)

## மரண அறிவித்தல்கள்

### திரு. தம்பு கந்தையா அமிர்தநாதர்

இளைப்பாறிய ஆசிரியர் திரு: தம்பு கந்தையா அமிர்தநாதர் காலமாகிவிட்டார். இவர் பொன்ரேயன் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், அருட் தந்தை ஜெயசேகரம் (ஜேர்மனி), காலஞ்சென்ற லோறன்சியா, சௌந்தரி, நிற்றுவரப்பிரகாசம் (ஆசிரியை, சம்பத்திரிசியார் கல்லூரி), குணசேகரம், அரியமலர் (கனடா) ஆகியோரின் தந்தையும், ஜேசுதாசன், வரப்பிரகாசம் (இத்தாலி), சிவரட்ணம் (கனடா), சந்திரா (ஆசிரியை, கன்னியர்மடம், மன்னார்) ஆகியோரின் மாமனாரும், மொறீன் (ஆசிரியை அக்குமைசாரா மத்திய கல்லூரி, பேருவளை), F. I. ஜேசுதாசன் (விஞ்ஞான பீடம் யா/பல்கலைக்கழகம்), நிறஞ்சன் (ஆசிரியர், பஞ்ஞசிக வித்தியாலயம், புத்தூர்), டொறின், நிலானி, சுபாலினி (யாழ். கன்னியர் மட மாணவிகள்), சுகந்தி (மன்னார் கச்சேரி), தாமரைச்செல்வன் (பொறியியல் பீடம், பேராதனை), யூட்சன் பற்சன், சஜீதா ஆகியோரின் பேரனும், வேதநாயகத்தின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 8-00 மணிக்கு 17/3, கச்சேரி நல்லூர் வீதி, இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித யுவானியார் கோவிலில் திருப்பலியின் பின் புனித மரியாள் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(2211)

### திருமதி பத்திநாதர் கனகம்மா (சிசிலியா)

திருமதி பத்திநாதர் கனகம்மா (சிசிலியா) காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பத்திநாதரின் அன்பு மனைவியும், சிறில்ரின் (ஆசிரியை, திருக்குடும்பக் கன்னியர் மடம்-யாழ்) பிலோமினா, பெர்ணடேத், லூர்த்தம்மா, தார்சில், டொறெற்ரூ, ஜெனிற்ரூ, றெக்ஸ் அலோசியஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பேக்மன், காலஞ்சென்ற யோசேப்பு, சூசைப்பிள்ளை, ஞானச்செல்வம், கிங்கரராயர், ஞானேந்திரவேல், மரியதாஸ் ஆகியோரது அருமை மாமியாரும் ஆவார்.

நல்லடக்கம்: இன்று (20-09-89) மாலை 4.00 மணி
புறப்படும் இடம்: 32, சென்: பற்றிக்ஸ் வீதி,
றெக்ளமேஷன் - யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.

(2401)

### திருமதி கத்தறீன் பிள்ளைநாயகம்

திருமதி கத்தறீன் பிள்ளைநாயகம் காலமாகிவிட்டார். இவர் G. A. V. பிள்ளைநாயகத்தின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற ராசன் பிள்ளைநாயகம், திருமதி சந்திராஜீன் ஜோசேப், திருமதி லக்சுமி ஒலிவியா பத்திநாதன், நேசன் பிள்ளைநாயகம், (A. S. P. திருகோணமலை) திருமதி புஸ்பராணி சதாசிவம் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி சொபியா செபஸ்தியாம்பிள்ளையின் அன்புச் சகோதரியும், அன்ரன் ஜோசேப், திருமதி தர்மா பிள்ளைநாயகம், பத்திநாதன் (Care International Jaffna) சதாசிவம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் சமக்கிரியைகள் 18—9—89 இல் கொழும்பு அன்ரசன் பிளற்றில் நடைபெற்றது.

தகவல்
Dr. G. செபஸ்தியாம்பிள்ளை
114, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (2396)

### திருமதி குலங்கநாதன் கோணேஸ்வரி

திருமதி குலங்கநாதன் கோணேஸ்வரி அவர்கள் 19-09-1989 இல் காலமானார்.

இவர் க. குலங்கநாதனின் அன்பு மனைவியும், லாவண்யா, சசிவன்யா, சஞ்சீவன், காருண்யா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயகுமார் (பிரான்ஸ்), தர்மகுமார் (பிரான்ஸ்), புஷ்பராணி (பிரான்ஸ்), சுசீலா, வசந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், க. கிருஷ்ணபிள்ளையின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனியும், கு. தர்மலிங்கம் திருமதி த. குணகம்மா ஆகியோரின் மகளும், காலஞ்சென்ற கந்தையா, திருமதி க. நல்லம்மா ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 20-09-1989 இன்று பிற்பகல் கேரதீவு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. குலங்கநாதன்
5-ம் வட்டாரம், புங்குடுதீவு
(ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலய அருகாமையில்) [1957]


## லொறிகள் உடன் விற்பனைக்கு

26/27 ஸ்ரீ இலக்க லொறிகள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: அலுவலக நேரங்களில்.

பெட்டா எசன்ஸ் சப்ளையேர்ஸ்
223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். [2356]



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org